மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே திங்கள்சந்தையிலே குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே அந்த மாவட்டத்தைச் சேர்ந்த வனத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, இந்த வருடம் திங்கள்சந்தையிலே காய்கறிகளுக்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் பகுதியிலிருந்து இந்தியா முழுவதற்கும் முட்டை அனுப்பப்படுகிறது. எனவே, அங்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்கறிகளுக்காகத்தான் எங்களுடைய துறையின் மூலமாக குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் முட்டை போன்ற பொருட்களுக்கென கிடங்குகள் அமைப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

171—

சந்தன மரங்கள்

***5700—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 26]

திருப்பத்தூர் தொகுதி, புதூர்நாடு மலைப் பகுதியில் சந்தன மரங்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வனக்கோட்டம், புதூர்நாடு மலைப் பகுதியிலுள்ள காப்புக் காடுகளில் இயற்கையாகவே சந்தன மரக் கன்றுகள் வளர்ந்து வருவதால், இப்பகுதியில் சந்தன மரம் தனியாக நட்டு வளர்க்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.

திரு. கா.கோ. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் சமூக நீதி காத்த வீராங்கனை, தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிவோடு வணங்குகிறேன்.

திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாது மலையின் பரப்பளவு ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஏக்கர் ஆகும். ஆசியாவிலேயே மிகப் பெரிய சந்தனக் கிடங்கு திருப்பத்தூர் பகுதியில் அமைந்துள்ளது. அந்தப் பகுதி உலகத் தரம் வாய்ந்த சந்தன மரங்களைக்கொண்ட அடர்ந்த வனப் பகுதியாகக் காணப்பட்டது. தற்பொழுது சந்தன மரங்கள் மிகவும் குறைவாக உள்ள இந்நிலையில், ஜவ்வாது மலை மீண்டும் பழைய பொலிவுடன் புத்துயிர்பெறும் பொருட்டு, அதிக அளவில் சந்தன மரங்களை வளர்க்கும் திட்டம் எதுவும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் வனக்கோட்ட புதூர்நாடு மலைப் பகுதியிலுள்ள காப்புக் காடுகளில் இயற்கையாகவே சந்தன மரக் கன்றுகள் வளர்ந்து வருகின்றன. ஜவ்வாது மலைப் பகுதியில் சுமார் 54,000 எக்டேர் பரப்பில் சந்தன மரக் கன்றுகள் இயற்கையாகவே வளர்கின்றன. இச்சந்தன மரக் கன்றுகளின் விதைகள் பறவைகள் எச்சத்தின் வாயிலாகவும், காற்று, மழை போன்றவற்றால்

இயற்கையாக இடம் பெயர்வதாலும், தாய் மரங்களின் வேர் மூலமாகவும் இயற்கையாகவே வளர்ந்து வருகின்றன. இயற்கையாக வளரும் மரங்களைப் பாதுகாக்கவும், ஏற்கெனவே உள்ள வன வளத்தினைத் தொடர்ந்து பராமரிக்கவும், காப்புக் காடுகளில் தீ ஏற்படுவதைத் தடுக்கவும் பல்வேறு ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, சந்தன மரங்களைத் தனியாக நட்டு வளர்க்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை தனியார் நிலங்களில் வளர்ப்பதற்கு வனத் துறை மூலமாக ஊக்குவிக்கப்படுமா? அப்படி தனியார் நிலங்களில் வளர்க்கும்போது, தனியார்கள் அவர்கள் விருப்பத்திற்கு அவற்றை விற்க முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாதது. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களைப் பொறுத்தவரை, அவற்றைத் தனியார்கள் விற்பதற்கு அனுமதியில்லை. அவர்கள் வளர்த்தாலும் அந்த மரங்களை அரசிடமே ஒப்படைத்து, வியாபாரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதிக்குட்பட்ட தொப்பூர், மலையூர்காடு, கம்பம்பட்டி, ஈசல்பட்டி போன்ற பகுதிகளில், வனத் துறையின் சார்பாக உள்ள இந்தக் காட்டுப் பகுதிகளில், சந்தன மரக் கன்றுகள் வளர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வனங்களிலே இயற்கையாகவே சந்தன மரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகையால், அரசு தனியாக சந்தன மரங்கள் வளர்ப்பதற்கான திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் எத்தனை வனக் காப்பகங்கள், எத்தனை ஆயிரம் சந்தன மரங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, நீங்கள் மரங்களை எண்ணச் சொல்கிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் அந்தப் புள்ளிவிவரங்கள் பற்றி வனத் துறையில் கேளுங்கள். Please sit down. (குறுக்கீடு) நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

முற்பகல் 10—20

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுக் காலமாக (குறுக்கீடு) ஒரே நிமிடம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பாஸ்கர் அவர்கள் கேட்டது relevant கேள்வி. அதை நான் அனுமதித்தேன். திடீரென்று புள்ளிவிவரம் கேட்டால், அதற்குப் பதில் சொல்ல அமைச்சர் அவர்கள் தயாராக வேண்டும், இல்லையா? அதனால் அதை விட்டுவிட்டு, உங்களுடைய தொகுதியில் சந்தன மரங்களை வளர்க்க வேண்டியதைப் பற்றிக் கேளுங்கள். அதற்கு நான் அனுமதி தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், சித்தேரி மலையிலே மிக விலை உயர்ந்த சந்தன மரங்கள் இருந்தன. கடந்த 10 ஆண்டுக் காலமாக அங்கே ஒரு செடி கூட கிடையாது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே தானாக செடிகள் முளைக்கின்றன என்று சொன்னதன் அடிப்படையில், எந்தெந்தப் பகுதியிலே மரங்கள் அப்படி வளர்ந்து

இருக்கின்றன, எவ்வளவு மரங்கள் வளர்ந்திருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூல வினாவிற்குத் தொடர்பில்லாமல் இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக வினா எழுப்பினால், அதற்குப் பதில் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் அப்போதே சொன்னேன். (குறுக்கீடு). Please sit down. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கல்வராயன் மற்றும் சின்ன கல்வராயன் பகுதிகளில் சென்ற காலங்களில் அதிக அளவில் சந்தன மரங்கள் இருந்தன. திரும்பவும் அப்பகுதிகளில் அதிகமான சந்தன மரங்கள் பயிர் செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மாதேஸ்வரன், மீண்டும் அதே கேள்வியை உரக்கக் கேளுங்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெரிய கல்வராயன் மற்றும் சின்ன கல்வராயன் மலைப் பகுதிகளில் சென்ற காலங்களில் அதிக அளவில் சந்தன மரங்கள் பயிரிடப்பட்டன. தற்சமயம் அந்த மரங்கள் எல்லாம் அழிந்துவிட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிகளில் திரும்பவும் அதிகமான சந்தன மரங்களை வளர்க்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு புதியதாகத்தான் திட்டம் போட வேண்டும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக சந்தன மரங்கள் நடும் திட்டம் மாண்புமிகு

2012 ஏப்ரல் 26]

தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.*

திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, சந்தனக் கட்டை வீரப்பனை அழித்து, வனத்தைப் பாதுகாக்கக்கூடிய காவலராக இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நல்ல நேரத்திலே தருமபுரி, பெண்ணாகரம், அந்தியூர் மற்றும் ஏற்காடு பகுதிகளிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் இயற்கையாக வளர்கின்ற சந்தன மரங்கள் அதிகமாக இருக்கின்றன. தற்போது புதியதாக மரம் நடும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களின் கருத்தினைப் பெற்று அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தனியார் நிலங்களில் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுமா என்றும், விலை உயர்ந்த சந்தன மரங்களை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. குணசேகரன், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்*

இதே கேள்வியைக் கேட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் அதைக் கவனிக்காமல் மீண்டும் அதே கேள்வியைக் கேட்க வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

172—

பால் குளிரூட்டும் நிலையம்

*__5328—திரு. கே.பி. பரமசிவம்:__

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர், பல்லடம் ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்லடம் தொகுதியில், பல்லடம், பொங்கலூருக்கு அருகில் உள்ள சுல்தான்பேட்டையில், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆனால், தற்போது நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பொங்கலூர் பகுதியில் நடுவேலன்பாளையத்தில், நாள் ஒன்றுக்கு 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பு நிலையம், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைப்படி நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும், பல்லடம் தொகுதியில், நாள் ஒன்றுக்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு பால் குளிர்விப்பான் மையங்கள்